| Headline | Dato Tanendran met UUM Vice Chancellor | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 22 Nov 2012 | Language | Tamil |
| Circulation | 28,000 | Readership | 180,000 |
| Section | News | Color | Full Color |
| Page No | L-16 | ArticleSize | 220 cm² |
| AdValue | RM 948 | PR Value | RM 2,843 |
| | | | |



# டத்தோ தனேந்திரன் - வட மலேசிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் சந்திப்பு



**செல்வம் சடையன்**

சிக் (கெடா), நவ 22

மலேசிய மக்கள் சக்திக் கட்சியின் தேசியத் தலைவரும் சக்தி அறவாரியத்தின் தலைவருமான டத்தோ ஆர்.எஸ். தனேந்திரன், வட மலேசிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் டத்தோ முஸ்தபா மரியாதை நிமித்தமாக சந்திப்பு நடத்தி இந்திய மாணவர்களின் நலன் குறித்தும் அவர்களின் நடவடிக்கைகள், படிப்பில் கவனமாகச் செயல்படுதல், கட்டொழுங்கு போன்ற விஷயங்களைப் பகிர்ந்து கொண்டு உண்மை நிலவரங்களையும் தெரிந்து கொண்டார். பின்னர் அங்குள்ள பல்கலைக்கழக நூல் நிலைய மண்டபத்தில் 'போனிர் ஆப் லைட்' என்ற சக்தி கொண்ட மினரல் வாட்டர் அறிமுக நிகழ்வைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அம்மா பாய் ஷி யின் பவர் ஆஃப் லைட் கனிம நீரின் மகிமை, குணப்படுத்தும் அதிசயத்தையும் அதனால் நன்மை பெற்றவர்களின் உண்மை நிலவரங்களைப் பற்றியும் துல்லியமாக மாணவர்களுக்கு விளக்கம் கொடுத்தனர். இந்த அதிசயத் தண்ணீரே பல நோய்களில் சிக்கியவர்களுக்கு நல்ல பலனைத் தருவதாக இதை மாரா தொழில்நுட்பக் கல்லூரியால் அங்கீகாரம் தரப்பட்டுள்ளதையும் அம்மா சுட்டிக்காட்டினார். வட மலாயாப் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்போடு இந்த நீர் அறிமுக நிகழ்வு வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

Powered by: MediaBanc
Be informed